இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 355 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆடி 19 – திங்கள்கிழமை 04 ஆகஸ்ட் 2025 – வெளியீடு 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 355 : Thiruvalluvar Year - 2056 - Aadi 19 - Monday 04 August 2025 - Dak 16 Pages ₹ 5.00

## தூத்துக்குடியில் ரூ.1,119 கோடியே 67 லட்சம் மதிப்பீட்டில் அமைந்துள்ளது!

# ‘வின் ஃபாஸ்ட்’ மின் வாகன தொழிற்சாலை - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார் !

## வாகன முதல் விற்பனையை இன்று தொடங்கி வைக்கிறார்!

**தூத்துக்குடி, ஆக.4-**

**தூத்துக்குடி வின்ஃபாஸ்ட் மின்சார வாகன உற்பத்தி தொழிற்சாலையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைத்து முதல் விற்பனையை தொடங்கி வைக்கிறார்.**

தமிழ்நாட்டை 2030-ம் ஆண்டுக்குள் ஒரு லட்சம் கோடி அமெரிக்க டாலர் பொருளாதார மாநிலமாக மாற்றுவதற்கான இலக்கை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிர்ணயித்துள்ளார். இதன் ஒரு பகுதியாக சென்னையில் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்றது.

இந்த மாநாட்டில் உலகின் முன்னணி மின் வாகனத் தயாரிப்பு நிறுவனமான வியட்நாம் நாட்டைச் சேர்ந்த வின்பாஸ்ட் நிறுவனம், தூத்துக்குடியில் 16 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் மின்சார கார் உற்பத்தி தொழிற்சாலையை அமைக்க ஒப்பந்தம் செய்தது. இந்த தொழிற்சாலைக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

முதற்கட்டமாக ஆயிரத்து 119 கோடியே 67 லட்சம் ரூபாய் செலவில் 114 ஏக்கரில் தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஆண்டுக்கு ஒன்றரை லட்சம் வாகனங்களை உற்பத்தி செய்யும் வகையில் 2 பணிமனைகள், 2 குடோன்கள், பரிசோதனைக் கூடம் உள்ளிட்டவை அமைக்கப்பட்டுள்ளன.

### புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்!

இங்கு உற்பத்தி செய்யப்படும் மின்சார கார்கள் இலங்கை மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு தூத்துக்குடி துறைமுகம் மூலம் ஏற்றுமதி செய்யப்பட உள்ளன. இந்நிலையில், இன்று தூத்துக்குடி செல்லும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், வின் ஃபாஸ்ட் மின்சார வாகன உற்பத்தி தொழிற்சாலையை திறந்து வைத்து, முதல் விற்பனையை தொடங்கி வைக்கிறார்.



இதனைத் தொடர்ந்து தூத்துக்குடி - திருச்செந்தூர் சாலையில் அமைந்துள்ள மாணிக்கம் மஹாலில் நடைபெறும் நிகழ்ச்சியில், உலக முதலீட்டாளர்களையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சந்திக்கிறார். இந்தச் சந்திப்பின் போது, பல்வேறு புதிய தொழில் முதலீட்டுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### முதல்வருக்கு வரவேற்பு!

இந்நிலையில் தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான பி.கீதாஜீவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

இன்று (ஆகஸ்ட் 4ஆம் தேதி - திங்கட்கிழமை) முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையிலிருந்து விமானம் மூலம் புறப்பட்டு காலை 9.00 மணியளவில் தூத்துக்குடி விமான நிலையம் வந்தடைகிறார். அங்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மாவட்டக் கழகம் சார்பில் சிறப்பான வரவேற்பு வழங்கப்படுகிறது. அங்கிருந்து சாலை மார்க்கமாக மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கடந்து தூத்துக்குடி - மதுரை புறவழிச் சாலை வழியாக சென்று, வின்ஃபாஸ்ட் மின்சார கார் தொழிற்சாலையை திறந்து வைத்து, அங்கு நடைபெறும் துவக்க விழாவில் பங்கேற்கிறார்.

அதன்பிறகு அங்கிருந்து சாலை மார்க்கமாக FCI குடோன் வழியாக தூத்துக்குடி மாநகருக்குள் வந்து விவிடி சிக்னல், தெற்கு காவல் நிலையம், காமராஜர் கல்லூரியைக் கடந்து தூத்துக்குடி - திருச்செந்தூர் சாலையில் உள்ள மாணிக்கம் மஹால் திருமண மண்டபத்தில் நடைபெறும் பல்வேறு தொழிற்சாலைகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யும் நிகழ்வில் கலந்து கொள்கிறார்.

புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வு முடிந்து, அங்கிருந்து புறப்பட்டு காமராஜர் சாலை, பிரையண்ட் நகர் 1வது தெரு, சிதம்பர நகர் மெயின் ரோடு, விவிடி சிக்னல் வழியே விமான நிலையம் சென்று சென்னை திரும்புகிறார்.

இவ்வாறு அமைச்சர் பி.கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.

